O.S. No: 46/2017

பெயர் : **கார்த்திகேயன்**

**வா.சா.** 3

07/06/2023

**குறுக்கு விசாரணை**

ஏற்கனவே நான் தாக்கல் செய்த முதல் விசாரணை சாட்சியத்திற்கான பிரமாண வாக்குமூலம் எங்கே வைத்து தட்டச்சு செய்யப்பட்டது என்று தெரியாது. அதில் வழக்கறிஞர் தான் என்னிடம் கையொப்பம் வாங்கினார். வழக்கறிஞர் அலுவலகத்தில் வைத்து கையொப்பம் போட்டேன். நான் கையெழுத்து போடும் போது மாலை 7 மணியிருக்கும். கையெழுத்து போட்ட தேதி ஞாபகமில்லை. 2 மாதம் இருக்கும். தஞ்சாவூர் மாவட்ட போஸ்கோ நீதிமன்றத்தில் என் மீது வழக்கு நடைபெற்றதா என்றால் நடைபெற்று, குற்றவாளியில்லை என்று விடுதலை செய்துவிட்டார்கள். தீர்ப்பு நகலை பார்த்தால் தான் நான் விடுதலை செய்யப்பட்டேனா என்ற விவரம் தெரியும் வரும் என்றால் சரி. என் மீது புகார் கொடுத்தது என் மனைவி. என்னுடைய மகளிடமே நான் தவறாக நடந்துக்கொண்டதாக என் மனைவி என் மீது புகார் கொடுத்தார். நான் இன்று நீதிமன்றத்தில் யார் எதிராக சாட்சியமளிக்க வந்திருக்கிறேன் என்றால் திருவேங்கடத்திற்கு எதிராக சொல்ல வந்திருக்கிறேன். திருவேங்கடம் என் மீது என் நண்பர்கள் மீதும் அவரை கொலை செய்ய முயற்சி செய்வதாக புகார் கொடுத்து திருநீலக்குடி காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதா என்றால் என் மீது மட்டும் பதிவு செய்யப்பட்டுள்ளது. நான் சாட்யமளித்த சொத்திற்கான ஆவணத்தை எதையும் நேரடியாக பார்க்கவில்லை. என்னுடைய முகவரி நடு பட்டறை தெரு, திருநாகேஸ்வரம். என்னுடைய முகவரி நடு பட்டறை தெரு என்று தான் வழக்கறிஞரிடம் தெரிவித்தேன். நடு பட்டறை தெருவிற்கும், செங்குந்தர் தெருவிற்கும் 1 கிமீ தூரம் இருக்கும். எனக்கு நீதிமன்றத்தில் இருந்து சம்மன் வந்தது. நடு பட்டறை தெருவிற்கு தான் சம்மன் வந்ததா என்றால் செங்குந்தர் தெருவிற்கு போய் பார்த்துவிட்டு, இங்கு வந்து கையொப்பம் வாங்கினார்கள். அந்த விவரத்தை நான் என்னுடைய நிருபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். இன்றைய தேதி வரை வழக்கு சொத்து பிரதிவாதிகளுக்கு சொந்தமானது

என்று இந்த வழக்கின் வாதிகள் நாகராஜ், திலகவதிக்கு எதிராக அசல் வழக்கு எண் 109/2021 இல் இ.ம.எண் 92/2021 இல் உறுத்துகட்டளை பரிகாரம் வழங்கப்பட்ட நிலுவையில் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. இந்த வழக்கு சொத்து எந்த கிராமத்தில் உள்ளது என்றால் திருநாகேஸ்வரம் பேரூராட்சியில் உள்ளது. ராமசாமி செட்டியார் எந்த தேதி, மாதம், வருடத்தில் இறந்தார் என்று தெரியுமா என்றால் 4, 5 வருடங்களுக்கு முன்பு இறந்தார். தேதி தெரியாது. இன்றில் இருந்து 4, 5 வருடங்களுக்கு முன்பு என்றால் சரி. தாவா சொத்திற்கு வடபுறம் யார் இருக்கிறார்கள் என்றால் ஞாபகமில்லை. கீழ் பக்கம் யார் இருக்கிறார்கள் என்று ஞாபகமில்லை. திலகவதி இந்த வழக்கு சொத்திற்கு எந்த பக்கம் இருக்கிறார் என்றால் தெரியாது. இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது என்றாலும், பிரதிவாதிகள் எனக்கு எதிர்ப்பாக இருப்பதால் நான் அவர்களுக்கு எதிராக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் மீது பிரதிவாதி ஏற்கனவே புகார் கொடுத்திருப்பதால் நான் அவர் மீது விரோதம் கொண்டிருக்கிறேன் என்றால் சரியல்ல. 2 ஆம் பிரதிவாதி திருவேங்கடம் என் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்து வழக்கு பதிவு செய்யப்பட்டிருப்பதால் நான் அவர் மீது விரோதம் கொண்டு தற்போது நீதிமன்றத்தில் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. நீதிமன்றத்திற்கு வரும் வழக்கம் உண்டு. எனக்கு நீதிமன்றத்திற்கு வரும் பழக்கம் இருப்பதால் நான் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒப்பம்(xxxxxx)

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

ஒப்பம்(xxxxxx)
Additional District Judge,
Fast Track Court, Kumbakonam.

/உண்மை நகல்/
ஒப்பம்(xxxxxx)
Additional District Judge,
Fast Track Court, Kumbakonam.